

சென்னை வடக்கு மாவட்டம், பெரம்பூர் தெற்குப் பகுதி, 36 (அ) வட்ட தி.மு.க. சார்பில் சமத்துவ பொங்கல் விழா எம்.கே.பி.நகர் பகுதியில் 36 (அ) வட்ட செயலாளர் க.பாபு ஏற்பாட்டில் நடைபெற்றது. இதில் மாவட்டக் கழகப் பொறுப்பாளரும், பெரம்பூர் சட்டமன்ற உறுப்பினருமான ஆர்.டி.சேகர் கலந்து கொண்டு பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். நிகழ்ச்சியில் பகுதிக் கழகச் செயலாளர்கள் க.ஜெயராமன், அ.முருகன், வட்டக் கழகச் செயலாளர்கள் ஜி.மாரிமுத்து, த.ஆறுமுகம், எம்.உமாபதி, வி.முருகன், கே.தினகரன் மற்றும் அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பாக முகவர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

### தாம்பரம் மாநகர பெருங்களத்தூர்

### வடக்கு பகுதி தி.மு.க.

# 49வது வட்டக் கழகம் சார்பில் பொங்கல் விழா!

## பகுதிக் கழகச் செயலாளர் டி.காமராஜ் அறிக்கை!

சென்னை,ஜன.13-

தாம்பரம் மாநகர பெருங்களத்தூர் வடக்கு பகுதி திமுக மற்றும் 49 வது வட்ட திமுக சார்பில் தமிழர் திருநாள் பொங்கல் விழா இன்று 13.10.2025 காலை 10 மணிக்கு, கஸ்தூரி பாய்நகர், காட்டு கருமாரியம்மன் கோயில் அருகில் பகுதி கழக செயலாளர் டி.காமராஜ் என்னுடைய தலைமையிலும் வட்ட பிரதிநிதி ஆர். சீனா வரவேற்பிலும் நடைபெற உள்ளது. இந்நிகழ்ச்சியில் தாம்பரம் மாநகர கழக செயலாளர் எஸ். ஆர்.ராஜா எம்.எல்.ஏ., மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி கலந்து கொண்டு பல்வேறு விளையாட்டு போட்டிகளை துவக்கி வைக்கின்றனர்.

ஆகையால் பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக தோழர்கள், பொதுமக்கள், அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு டி.காமராஜ் பகுதி கழக செயலாளர் 4வது மண்டல குழுத்தலைவர் தெரிவித்துள்ளார்.



தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 4,33வது வார்டு வடக்கு குளக்கரை தெரு கடப்பேரியில் கிராம நிர்வாக அலுவலகம் தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிலையிலிருந்து 10 லட்சத்து 20 ஆயிரம் செலவில் கட்டப்பட்ட கட்டிடத்தை தாம்பரம் மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. திறந்து வைக்கப்பட்டது. இதில் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி. 4 வது மண்டல குழு தலைவர் பகுதி கழக செயலாளர் டி.காமராஜ் கலந்து கொண்டார். உடன் மாமன்ற உறுப்பினர் சி.சுரேஷ், வட்ட செயலாளர் எம். வினோத், வட்ட நிர்வாகிகள், மாநகராட்சி பொறியாளர் தங்கதுரை, தாம்பரம் வட்டாட்சியர் ராஜேந்திரன் உடனிருந்தனர்.

### வேலூர் தொகுதி – ஆரணி சாலையில் – புதிதாக

# வீட்டு வசதி வாரிய குடியிருப்புகள் கட்டித்தர வேண்டும்!

## சட்டப்பேரவையில் – ப.கார்த்திகேயன் வலியுறுத்தல்!

சென்னை, ஜன.13-

சட்டப்பேரவையில் வேலூர் தொகுதி கழக உறுப்பினர் ப.கார்த்திகேயன் எழுப்பிய கேள்வியும், அமைச்சர் சு.முத்துசாமி அளித்த பதிலும் வருமாறு:-



**ப. கார்த்திகேயன்:** வேலூர் சட்டமன்றத் தொகுதி, ஆரணி சாலையில், சுமார் 1 ஏக்கர் பரப்பளவில் வீட்டு வசதி வாரிய குடியிருப்புகள் பழுதடைந்த நிலையில் உள்ளன. அவற்றை இடித்துவிட்டு, புதிதாக குடியிருப்புகள் கட்டித் தர வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.

**அமைச்சர் சு.முத்துசாமி:** நான் ஏற்கெனவே சொன்னதுபோன்று, எங்கெல்லாம் கட்டடங்கள் பழுதடைந்து இருக்கின்றனவோ, உரிய அனுமதி பெற்று அவற்றையெல்லாம் இடித்துவிட்டு, புதிதாகக் கட்டுவதற்கு கண்டிப்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கையையும் கவனத்தில் எடுத்துக் கொண்டு, அதைச் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் சு.முத்துசாமி பதிலளித்தார்.

### மயிலாப்பூர் தொகுதியில் அமைந்துள்ள

# அய்யன் திருவள்ளுவர் திருக்கோயில் திருப்பணிகளின் நிலை என்ன?

## சட்டப்பேரவையில் – மயிலை த.வேலு கேள்வி!

சென்னை, ஜன. 13 -

சட்டப்பேரவையில் நேற்று, கேள்வி நேரத்தின் போது மயிலை தொகுதி கழக உறுப்பினர், "எங்கள் மயிலை தொகுதியில் அமைந்துள்ள திருவள்ளுவர் திருக்கோயிலின் திருப்பணிகள் நிலை என்ன?" என வினாத்தொடுத்தார்.

சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின்போது இது குறித்து நடைபெற்ற விவாதம் வருமாறு:-



**த.வேலு:** மனித குலத்திற்கு கதைகளையும் இதிகாசங்களையும் சொல்லிக் கொடுத்து அதன் மூலம் வாழ்க்கை நெறிமுறைகளை உருவாக்கிய காலத்திற்கு முன்னே இரண்டே வரிகளிலே நம் மனித குலத்திற்கு வாழ்க்கை நெறிமுறைகளை சொல்லித்தந்த அய்யன் திருவள்ளுவர் சிலையை கன்னியாகுமரியில் முத்தமிழ் கலைஞர் அவர்கள் உருவாக்கி 25 ஆண்டுகள் ஆனதை தொடர்ந்து வெள்ளிவிழாவாக மிகச் சிறப்பாக உலகமே வியக்கும் வகையிலே கொண்டாடி, நம்முடைய இனத்திற்கும் மொழிக்கும் பெருமை சேர்த்த முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியை நான் முதலில் தெரிவித்துக் கொள்கிறேன். என்னுடைய மயிலாப்பூர் தொகுதியிலே பிறந்ததாகக் கருதப்படும் அய்யன் திருவள்ளுவர் கோயிலின் திருப்பணியின் தற்போதைய நிலை யாது?

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு :** வான் புகழ் அய்யனுக்கு கன்னியாகுமரியில் சிலை வைத்தார் மறைந்தும் மறையாமல் வாழ்கின்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். சென்னை மயிலாப்பூரில் அமைந்திருக்கின்ற திரு வள்ளுவர் திருக்கோயில் என்பது கலைஞர் அவர்களால் பாலாலயம் செய்யப்பட்டு குடமுழுக்கு நடத்தப்பட்ட திருக்கோயிலாகும். தமிழ்நாடு முதலமைச்சர், திராவிட மாடல் அரசினுடைய நாயகன் அவர்கள் உத்தரவின் பேரில் 19 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருவள்ளு வரின் புகழுக்கு புகழ் சேர்க்கின்ற வகையில் ஒரு திருக்கோயிலை உருவாக்குகின்ற பணி ஒப்பந்தம் கோரப்பட்டு நிறைவு செய்யப்பட்டு இருக்கின்றது. இந்த மாத இறுதிக்குள் முதலமைச்சர் அவர்களின் பொற்கரங்களால் அந்த திருக்கோயிலுடைய திருப்பணிகள் தொடங்கி வைக்கப்பட இருக்கின்றது.

கன்னியாகுமரியில் திருவள்ளுவர் சிலைக்கு பெருமை சேர்க்கின்ற வகையில் முதலமைச்சர் அவர்கள் பொதுப்பணித்துறை அமைச்சர் அண்ணன் எ.வ.வேலு அவர்களுக்கு உத்தரவின் பேரில் 27 கோடி ரூபாய் செலவில் கண்ணாடி இணைப்பு பாலம் அமைத்ததை இன்றைக்கு உலகமே பாராட்டிக் கொண்டிருக்கின்றது. கன்னியாகுமரிக்கு ஒரு பாராட்டு என்றால் சென்னையில் அமைய இருக்கின்ற திருவள்ளுவர் சிலைக்கு நிச்சயம் கார் உள்ளளவும், கடல் நீர் உள்ளளவும் எங்கள் திராவிட மாடல் நாயகன் புகழ் எந்நாளும் பாடப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**கடம்பூர் ராஜு :** கோவில் பட்டி தொகுதி கயத்தாறு பேரூராட்சியில் திருமலை நாயகி சமேத முத்துகிருஷ்ண சுவாமி திருக்கோயிலில் திருப்பணிகள் 2020 ஆம் ஆண்டு தொடங்கி நான்கு ஆண்டுகளாக நிறைவு பெறாமல் உள்ளது. அந்த திருப்பணியை நிறைவு செய்து விரைவில் குடமுழுக்கு நடத்துவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டும். நான் விசாரித்ததில் நிதி பற்றாக்குறை இருப்பதாக சொன்னார்கள். எனவே கூடுதல் நிதியை ஒதுக்கி குடமுழுக்கு சிறப்பாக நடைபெறுவதற்கு அமைச்சர் ஆவன செய்வாரா?

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு :** உறுப்பினர் கோரிய முத்து கிருஷ்ண சுவாமி திருக்கோயில் என்பது 2020ம் ஆண்டு திருப்பணிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது உண்மை. ஆனால் அதற்கு போதிய நிதி ஒதுக்கீடு அந்த காலத்தில் செய்யப்படவில்லை. தற்போது ஆறு பணிகள் ஒரு கோடியே 20 லட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மூன்று மாத காலத்திற்குள்ளாக திருப்பணிகள் முடிவுற்று குட முழுக்கு நடத்தப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**எம்.பழனியாண்டி:** ஸ்ரீரங்கம் தொகுதி, குமாரவயலூர், முருகன் கோயில் எப்போது குடமுழுக்கு நடத்தப்படும் என்பதை இந்த சபையில் அறிவிப்பாரா?

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு:** கேளாமல் கொடுக்கின்ற மனசு, கேட்டதெல்லாம் தருகின்ற அரசு என்ற வகையில் குமாரவயலூர் முருகன் திருக்கோயிலுக்கு வருகின்ற 19.02.2025 அன்று குடமுழுக்கு நடைபெறும். இத்திருக்கோயிலில் 3 கோடி 20 லட்சம் ரூபாய் செலவில் 17 பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. முதலமைச்சர் அவர்களின் உத்தரவை பெற்று, கூடுதலாக 30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 16 பணிகள் பெருந்திட்ட வரைவில் எடுத்துக் கொள்ளப்பட இருக்கின்றன. குடமுழுக்கு நடைபெறும் அன்றைய தினமே இதற்குண்டான பணிகளும் தொடங்கி வைக்கப்படும்.

இவ்வாறு கேரவையில் விவாதம் நடைபெற்றது.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு திருவள்ளூர் நகர திமுக சார்பில் நகராட்சி அலுவலகத்தில் பணிபுரியும் தூய்மை பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ, திருவள்ளூர் சட்ட மன்ற உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன் ஆலோசனைபடி நகரக் கழகச் செயலாளர் சி.சு.ரவிச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது. இதில் மாநில தொண்டர் அணி செயலாளர்/ திருவள்ளூர் தொகுதி பார்வையாளர் மாஸ்டர் சேகர், தூய்மை பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் மற்றும் பிரியாணி வழங்கினார்கள். உடன் நகராட்சி மன்ற தலைவர் உதயமலர் பாண்டியன், நகராட்சி ஆணையர் விஸ்வநாதன், பொதுகுழு உறுப்பினர் ப. சிட்டிபாபு, நகர நிர்வாகிகள் தி.ஆ.கமலக்கண்ணன், டி.எம்.ரவி, என்.பரசுராமன், ராஜேஸ்வரி கைலாசம், எஸ். டி.பி.சம்பத் ராஜா, இ.குப்பன், டி.என்.ஆர்.சீனிவாசன், டி.சிவாகுமார் உள்பட வட்டக் கழகச் செயலாளர்கள் நகர்மன்ற உறுப்பினர்கள் அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கழக மூத்த முன்னோடிகள் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



திருவள்ளூர் மேற்கு மாவட்ட விவசாய அணி மாவட்ட விவசாய தொழிலாளர் அணி சார்பில் 2026 சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி .ராஜேந்திரன் ஆலோசனைப்படி மாவட்ட அமைப்பாளர்கள் களம்பாக்கம் எம்.பன்னீர்செல்வம், தாடி. நந்தகுமார் ஏற்பாட்டில் கடம்பத்தூர் மாணவள நகர் பஜார் பகுதியில் மாவட்ட அவைத்தலைவர் கே.திராவிட பக்தன், மாநில விவசாய அணி துணைச் செயலாளர் ஆர்.டி.இ.ஆதிசேஷன் பொதுமக்களுக்கு திராவிட ஆட்சியில் செய்த சாதனைகளை எடுத்துக் கூறி பொதுமக்களிடம் துண்டு பிரச்சாரம் வழங்கினார். அருகில் ஒன்றிய கழக செயலாளர் கே.அரிகிருஷ்ணன் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### தாம்பரம் பகுதி மக்கள் – மாணவர்களுக்கு பயன் அளிக்கக் கூடிய வகையில்

# ஈஸ்டர்ன் பைபாஸ் சாலையை இரு வழிச் சாலையாக அமைத்திடுக!

## சட்டப்பேரவையில் – கழக உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா வலியுறுத்தல்!

சென்னை, ஜன. 13

சட்டப்பேரவையில் தாம்பரம் தொகுதி கழக உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா எழுப்பிய கேள்வியும் அமைச்சர் எ.வ.வேலு அளித்த பதிலும் வருமாறு :-



**எஸ்.ஆர்.இராஜா:** கழகத் தலைவர் - முதலமைச்சர் அவர்களால் தாம்பரம் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராக இருப்பதில் நான் மிகவும் பெருமைப்படுகிறேன். காரணம், தாம்பரம் மிக வேகமாக வளர்ந்துவரும் பகுதியாக இருப்பதால், காஞ்சிபுரமாக இருந்தாலும், திருவள்ளூராக இருந்தாலும், மகாபலிபுரமாக இருந்தாலும், நிமிடத்தில் செல்லக்கூடிய வசதி உள்ளது.

டில்லிக்குப் போவதானாலும், திருநெல்வேலிக்குப் போவதானாலும், நிமிடத்திலும், மணியிலும் செல்லக்கூடிய அளவில் சுற்றுவட்டாரச் சாலைகள் அனைத்தும் மிக வேகமாக அமைக்கப்படுகின்ற வளர்ந்துவரும் பகுதியாக தாம்பரம் பகுதி உள்ளது,

Eastern Bypass சாலை புதிதாக அமைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. குறிப்பாக மப்பேடுலிருந்து வெங்கப்பாக்கம், வண்டலூர் கேளம்பாக்கம் இணைக்கின்ற மிகப் பெரிய சாலையானது, ஒன்றியத்தில் இருந்தது. முதலமைச்சர் அவர்கள் 2006-2011 ஆம் ஆண்டில் ரூ.2.00 கோடி நிதி அளித்துள்ளார்கள். அதன் பின்னர் அந்தச் சாலையானது, Unionல் சேர்த்துக் கொள்ளப்பட்டது. பின்னர் RRல் எடுத்துக்கொள்ளப்பட்டது. அதன் பின்னர் நெடுஞ்சாலைத் துறையால் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. அந்தச் சாலையை இரண்டுவழிச் சாலையாக அமைத்துக்கொடுத்தால், அந்தப் பகுதி மக்களுக்கும், பள்ளிக்குச் செல்கின்றவர்களுக்கும் மிகவும் பயனுள்ளதாக அமையும். தாம்பரம் பகுதியைப் பொறுத்தவரையில், இந்த ஒரே ஒரு கோரிக்கை தான் தற்போது இருக்கிறது. அமைச்சர் அவர்கள் இதனை கண்டிப்பாக நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**அமைச்சர் எ.வ.வேலு:** உறுப்பினர் கேட்டிருக்கின்ற கேள்வி, மிக முக்கியமானது. அதன் முக்கியத்துவம் கருதி, இந்த ஆண்டிலேயே அந்தச் சாலை அமைப்பதற்கான திட்ட மதிப்பீடுகள் தயார் செய்யப்படும்.

**பி. தங்கமணி:** திருச்செங்கோட்டிலிருந்து குமராம்பாளையம் செல்கின்ற சாலையில், ஆனங்கூர் பகுதியில் இரண்டு இரயில்வே கடவுகள் இருக்கின்றன. அப்பகுதியில் போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்கின்ற காரணத்தால், தொடர்ந்து அந்தக் கோரிக்கையை நான் பேரவையில் வைத்துக் கொண்டிருக்கின்றேன். அமைச்சர் அவர்கள் உடனடியாக அந்தப் பாலம் கட்டிக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், திருச்செங்கோட்டிலிருந்து ஈரோடு செல்கின்ற சாலை, நான்கு வழிச் சாலையாக மாற்றப்பட்டு, பள்ளிப்பாளையம் பகுதியில் பாலப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அப்பணிகள் மிகவும் மெதுவாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்கின்ற காரணத்தால், விரைவாக அப்பணிகளை முடிக்க வேண்டும் என்று பேரவைத் அமைச்சர் அவர்களை வேண்டிக் கேட்டுக் கொள்கிறன்.

**அமைச்சர் எ.வ.வேலு:** உறுப்பினர் தங்கமணி அவர்கள் ஏற்கெனவே தொடர்ந்து சட்டமன்றப் பேரவையில் இந்தக் கேள்வியை கேட்டுக்கொண்டி ருக்கிறார்கள். திருச்செங்கோடு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்களும் தொடர்ந்து என்னிடத்தில் கடிதம் கொடுத்திருக்கிறார்கள். ஏற்கெனவே நான் சொன்னேன். அதன் முக்கியத்துவம் கருதிதான், நான்கு வழிச் சாலை அமைப்பதிலும், ROB இரயில்வே பாலம் அமைப்பதிலும், அவற்றின் முக்கியத்துவத்தை கருதி, பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இரயில்வே பாலத்தைப் பொறுத்தவரையில் DPR தயார் செய்யப்படுகின்றன. நான்கு வழிச் சாலையைப் பொறுத்தவரையில், அந்த மாவட்டத்தில் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

மேலும் சொல்லப்போனால், நாமக்கல் மாவட்டத்திற்குதான் அதிகமாக நான்குவழிச் சாலைகள் அமைக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன. உறுப்பினர் கோரியதன் அடிப்படையில் அதன் முக்கியத்துவத்தினைக் கருதி, துறைரீதியாக மேலும் வேகமாக பணிகளை எடுத்துக்கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு அமைச்சர் எ.வ.வேலு பதிலளித்தார்.

### மயிலை த.வேலு – ஜெ.கருணாநிதி பங்கேற்பு!

# 141 'அ' வட்டத்தில் சமத்துவப் பொங்கல் - பொங்கல் பரிசு வழங்கும் விழா!

## வட்டச் செயலாளர் எஸ்.லட்சுமிகாந்தன் அறிக்கை!

சென்னை, ஜன.13-

141 'அ' வட்ட கிளை கழகம் சார்பில் தமிழர் திருநாளாம் பொங்கல் விழா முன்னிட்டு சமத்துவ பொங்கல் விழா இன்று (13.01.2025, திங்கட்கிழமை) காலை 10.00 மணியளவில் தி.நகர், வ.உ.சி தெருவில் கொண்டாடப்படுகிறது.

எஸ்.லட்சுமி காந்தன் (141 'அ' வட்ட கிளை கழக செயலாளர்) விழா ஏற்பாட்டினை செய்துள்ளார்.

எஸ்.மோகன்ராஜ் (சென்னை தென்மேற்கு மாவட்ட பிரதி), என்.நாராயணன் (141 'அ' வட்ட பொருளாளர்) விழாவில் 500 மகளிர்களுக்கு பொங்கல் பரிசினை சென்னை தென்மேற்கு மாவட்ட செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ., தியாகராயர் நகர் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் ஜெ. கருணாநிதி எம்.எல்.ஏ ஆகியோர் இனணந்து வழங்குகிறார்கள்.

உடன் வருகை புரிந்து சிறப்பிப்பவர்கள், தியாகராயர் நகர் மேற்கு பகுதி செயலாளர் கே.ஏழுமலை, 141 வது வார்டு மாமன்ற உறுப்பினர் ராஜா அன்பழகன் மற்றும் சென்னை தென் மேற்கு மாவட்ட மகளீர் தொண்டர் அணி அமைப்பாளர் மோனிஷா கருணாநிதி, 141 'அ' வட்ட கிளை கழக முன்னால வட்ட செயலாளர் ஆ.ஏழுமலை, 141 'அ' வட்ட கிளை கழக செயலாளர் ஆ.சி.மணிமாறன்

இந்நிகழ்ச்சிக்கு வட்ட கிளை கழக நிர்வாகிகள், பாக பொறுப்பாளர்கள் மற்றும் பாக உறுப்பினர்கள், அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துனண அமைப்பாளர்கள், மகளிர் அணியினர், கழக முன்னோடிகள், முக்கியஸ்தர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு எஸ்.லட்சுமி காந்தன் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.



எழும்பூர் சட்டமன்றத் தொகுதி 99வது வார்டு பாகம்: எண் 1,2,3 உட்பட்ட பகுதிகள் திடீர் நகர், சாலை மாநகர், ஆர்.கே புரம், ஆகிய பகுதிகளில் வீடு வீடாக சென்று மக்கள் குறைகளை திமுக அயலக அணி மாநில துணைச் செயலாளர் மற்றும் எழும்பூர் சட்டமன்றத் தொகுதி 99வது வார்டு மாநகராட்சி மன்ற உறுப்பினர் பரிதிஇளம்சுருதி மக்கள் குறைகளை கேட்டு அறிந்தார். உடன் மாநகராட்சி அதிகாரிகள், கோட்ட பொறியாளர் சிவகுமார், குடிநீர் மற்றும் கழிவுநீர் வாரிய பொறியாளர் கண்ணன், துப்புரவு ஆய்வாளர் கிருஷ்ணமூர்த்தி, மின்துறை உதவி பொறியாளர் கந்தன், பாகநிலை முகவர்கள், திடீர் நகர் கோ.தட்சிணாமூர்த்தி, ஆர்.கே.புரம். சண்முகம், சாலை மாநகர் அர்ஜுன் ஆகியோர் கலந்து கொண்டனர்.